## விடியல்

The Dawn

*மாத இதழ், பொழுது – 23*
*மார்ச், 2011*
*vidiyalmagazhine.blogspot.com*
*vidiyalmagazhine@gmail.com*

*சிறப்பாசிரியர்*
முனைவர் நா. கண்ணன்
கல்லூரி முதல்வர்

*ஆசிரியர்*
முனைவர் மா. கார்த்திகேயன்
தமிழ்த்துறைத் தலைவர்

*இணை ஆசிரியர்*
முனைவர் ப. சரவணன்
தமிழ் விரிவுரையாளர்

*ஆசிரியர் குழு*
தமிழ் விரிவுரையாளர்கள்
அனைவரும்

*வெளியீடு:*

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA

தமிழ்த்துறை,
கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு – 637 215,
நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
**www.ksrcasthamizh.blogspot.com**
**www.ksrcas.net**

# உள்ளடக்கம்

- தோப்புக்கரணம், ‘கம்பளி’யானை 02
- ஆசியா – சிறுகுறிப்பு 03
- *மலர் மருத்துவம் - தாழம்பூ* 05
- *கட்டுரைகள்*
  - மருத்துவக் குறிப்புகள் 04
  - *திருக்குறளில் எண்கள்* 06
  - *மரியா மாண்ட்டிசோரி* 10
  - *அருகம்புல்* 12
  - *ஜேம்ஸ் ஆலனின் சிந்தனைகள்* 14
- *கவிதைகள்*
  - *காலத்திற்கு ஏற்ப குறட்பாக்கள்* 03
  - *முத்தம்,அழுகை* 05, *தாய்* 07,
  - *வாழ்வினிக்கும், மண்ணின்மகள்* 07
  - *பசுமைப்புரட்சி* 10,
  - *இளைஞர்களுக்கு* 13,
  - *என் தமிழ்மொழி* 14
- *படித்துவியந்தவை* 11
- *மாதம் ஒரு படைப்பாளர்: எழுத்தாளர் அ. முத்துலிங்கம்* 15
- *தொடர் கட்டுரை (பகுதி – 3)* *காதுவலி, மூலநோய், பல்வலி சில தீர்வுகள்* 08
- *நெடுங்கவிதை – கணிதக் கடவுள்* 17
- *தொடர் செய்யுள் (பகுதி – 7)* *கே.எஸ்.ஆர். பிள்ளைத் தமிழ்* 20

## தோப்புக்கரணம்

விநாயகர் புத்திசாலித்தனத்தின் வடிவமாகக் கருதப்படுகிறார். இவர் முன்நின்று நெற்றிப் பொட்டில் குட்டிக்கொண்டு, வலது கரத்தால் இடது காது மடலையும், இடது கரத்தால் வலது காது மடலையும் இழுத்துக்கொண்டு தோப்புக்கரணம் போடும் பழக்கம் பலருக்கும் உள்ளது.



இவ்வாறு செய்வதால் மூளை நரம்புகள் தூண்டப்பட்டு புத்திசாலித்தனம் அதிகரிப்பதாக விஞ்ஞானிகள் கண்டறிந்திருக்கிறார்கள். ஜப்பானியர்கள் தினந்தோறும் ஐம்பது முறை தோப்புக்கரணம் போடுவதை உடற் பயிற்சியாகவே மேற்கொள்கிறார்கள்.

முற்காலங்களில் ஆசிரியர்கள், மாணவர்களுக்குத் தண்டனை அளிக்கும் விதமாகத் தோப்புக்கரணம் போடச் சொல்வார்கள்.

இது குழந்தைகளின் புத்திசாலித்தனத்தை அதிகரிக்கச் செய்யும் உத்தியாகத்தான் பயன்படுத்தப் பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

***ஆர். அருணா,***
***இளங்கலை கணிதம் (கணினி) மூன்றாமாண்டு.***

## ‘கம்பளி’ யானை

கம்பளி யானை என்பது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பூமியின் வட அரைக்கோளத்தில் வாழ்ந்து வந்துள்ள பெரும் விலங்கினம்.

இது இன்றைய யானைகளின் மூதாதையினராகக் கருதப்படுகின்றன. இவற்றின் உடல் முழுவதும் அடத்தியான உரோமங்களால் போர்த்தப் பட்டிருந்த காரணத்தால் இவை கம்பளி யானைகள் என அழைக்கப்பட்டன.

ஆதிகால மனிதர்களால் வரையப்பட்ட குகை ஓவியங்களில் இம்மிருகங்களின் உருவங்கள் வரையறுக்கப்பட்டன. கிட்டத்தட்ட 10,000 ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வினம் பூமியிலிருந்து முற்றிலும் அழிந்து, மறைந்து விட்டதாக அறிவியலாளர்கள் கருதினர்.



வடஅமெரிக்காவில் வடக்கு யூரேசியாப் பகுதியில் சைபீரியாவிலும் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புகள் மற்றும் பனியில் உறைந்த எலும்புக்கூடுகள் ஆகியவற்றில் இருந்து இந்த விலங்குகள் அறிய முடிகிறது.

குறைந்தது 1,50,000 அண்டு வயதான இவ்விலங்கு பற்றி முதலாவது தரவு யூரேசியாவின் உறைபனிப் பரவலின்போது பெறப் பட்டது.

சைபீரியாவின் யானையொன்று 1999 இல் அகழ்ந்தெடுக்கப்பட்டது. சிதை வடையாத உடலைக் கொண்ட இந்த ஆண்யானை சுமார் 20,000 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்திருக்கலாம் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

**பூ. கஸ்தூரி,**
***இளங்கலை தமிழ் மூன்றாமாண்டு.***

# ஆசியா – சிறுகுறிப்பு

உலகிலேயே ஆசியாக்கண்டம்தான் மிகப் பெரிய கண்டம். மக்கள்தொகை மிக அதிகமானதும் இதுவே. உலக மக்கள் தொகையில் பாதி ஆசியாவில் தான் வசிக்கிறார்கள்.



ஆசியாவில் மிகச்சிறிய நாடு மாலத்தீவுகள். உலகின் மிக உயரமான இடமான எவரெஸ்ட் சிகரமும், மிகவும் தாழ்ந்த இடமான சாக்கடலும் (இஸ்ரேலுக்கும் ஜோர்டானுக்கும் நடுவில் உள்ளது) ஆசியாவில்தான் உள்ளது.

உலகில் மிக அதிகமாக அரிசி, கோதுமை, இயற்கை, ரப்பர், டீ, பருத்தி, சணல் விளைவது ஆசியாவில்தான்.

உலகில் மிக முக்கிய மதங்களான இந்து, இஸ்லாம், புத்தமதம், கன்ஃபூசியனிசம், ஜீடாயிசம் ஆகியவை ஆசியாவில்தான் தோன்றின.

எழுத்துக்கள் உருவானது ஆசியாவில்தான். காகிதம், காகிதப் பணம், துப்பாக்கிமருந்து ஆகியவை ஆசியாவில்தான் கண்டுபிடிக்கப்பட்டன.

**செ. பிரபாகரன்,**
***இளங்கலை இயற்பியல் மூன்றாமாண்டு.***

## காலத்திற்கு ஏற்ப குறட்பாக்கள்

**“ஊழல் அழிவுக்கு காரணம் என்பது**
**யாரும் அறியாத தில்”** (தங்கராஜ், எஸ்)

**“ஊழல் பணியாக செய்யும் நரகர்க்கு**
**இவ்வுலகில் இல்லை இடம்”** (பிரேம்குமார், பி)

**“ஊழல் வளர்ந்து வருகின்ற நாடு**
**தவறான ஆட்சியின் வீடு”** (சத்தியராஜ், மு)

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு
மாணாக்கர்கள்

# மருத்துவக் குறிப்புகள்

***கண் ஒளி பெற:*** சூரிய உதயத்திற்கு முன்பாக எழுந்து கொள்ள கண்களில் ஒளி பெறும்

***காது வலி குணமாக:*** வாழைப் பட்டையைத் தீயில் சூடேற்றிப் பிழிந்து ஓரிரு துளிகள் விட குணமாகும் அல்லது வெற்றிலைச் சாறை காதில் விடலாம்.

***தொண்டைபுண் ஆற:*** கிராம்பைத் தணலில் வதக்கி வாயிலிட்டு சுவைக்கலாம்.

***குரல் மாற்றத்தைச் சரிசெய்ய:*** கடுக்காய் தோல் சிறுதுண்டு வாயில் போட்டு அடக்கிக் கொள்ள மாற்றம் பெறும்.

***வாய்ப்புண் குணமாக:*** பப்பாளிப் பாலை வாய், நாக்கு புண்ணிற்குத் தடவினால் வாய்ப்புண் குணமாகும்.

***வாந்தி நிற்க:*** இஞ்சிச் சாறுடன் சம அளவு வெங்காயச் சாறு கலந்து பருகினால் வாந்தி நிற்கும்.

***மூக்கில் நீர் வடிதல் குணமாக:*** வேப்ப இலை ஓமம் அரைத்து நெற்றி மற்றும் பிடரியில் பூசிக் கொள்ளலாம்.

***சளி குணமாக:*** மாதுளம் பழச்சாறு, எலுமிச்சைப் பழச்சாறு கலந்து குடிக்கலாம்.

***வயிற்று போக்கு குணமாக:*** சுண்டைவத்தல், எண்ணெயில் வறுத்து இரவு மட்டும் உணவுடன் உண்ண வேண்டும்.

***டைபாய்டு குணமாக:*** அரைக்கீரையைச் சமைத்து உண்ண வேண்டும்.

***மூக்கில் இரத்தம் வருவது நிற்க:*** மாதுளம்பழச்சாறு. அருகம்புல் சாறு முப்பது மில்லி மூன்று நாட்கள் சாப்பிட வேண்டும்.

***இரத்தசோகை குணமாக:*** மிளகு, சீரகம் சேர்த்து சாப்பிட வேண்டும்

***இதய படபடப்பு நீங்க:*** தினசரி 1 பேரிக்காய் சாப்பிட வேண்டும்.

***இதயம் வலுவடைய:*** சீதாப்பழத்தை அவ்வப்போது சாப்பிடலாம்.

***காய்ச்சல் குணமாக:*** கோரை கிழங்கைச் சுத்தமாக்கி நீர்விட்டுக் காய்ச்சிக் குடிக்க வேண்டும். (அல்லது) மிளகு, திப்பிலி, சுக்கு சம அளவு பொடி செய்து தேனில் கலந்து உண்ண வேண்டும்.

***ஜலதோஷம் விலக:*** சர்க்கரை சேர்க்காத கடுங்காப்பியைப் பருக வேண்டும்.

***உள்சளிகட்டு தீர:*** வல்லாரை இலையுடன், தூதுவளை சேர்த்தரைத்து பாலில் கலந்து பருக வேண்டும்.

***பல் கரை சொத்தை குணமாக:*** பிரம்மத்தண்டு எரித்த சாம்பலால் பல் துலக்கினால் குணமாகும்.

***பல்வலி குணமாக:*** ஒரு துண்டு சுக்கை வாயில் போட்டு அடக்கிக் கொண்டால் பல்வலி குணமாகும்.

***விக்கல் குணமாக:*** விரலிமஞ்சள் ஒரு துண்டை சுட்டு கரியாக்கி உண்ண வேண்டும்.

***இரத்த வாந்தி நிற்க:*** பறங்கி விதையை உலர்த்தி, பொடி செய்து சீரகம், வெல்லம் சேர்த்து உண்டால் இரத்த வாந்தி நிற்கும்.

***நல்ல தூக்கம் வர:*** சீரகத்தை வறுத்துப் பொடி செய்து வாழைப்பழம் சாப்பிட வேண்டும்.

***அல்சர் குணமாக:*** தினமும் ஒரு குவளை திராட்சைப்பழச்சாறு குடிக்க வேண்டும்.

***தலைவலி தீர:*** ஓமவல்லி இலைசாறுடன் நல்லெண்ணெய் கலந்து பற்றுப் போட வேண்டும்.

***தலைவலி பாரம் குறைய:*** விரலி மஞ்சலை விளக்கெண்ணெய் தடவி விளக்கில் சுட்டு புகையைச் சுவாசிக்கலாம்.

***இரத்த கொதிப்பு நீங்க:*** அகத்தி கீரையை வாரம் 2 முறை சாப்பிட வேண்டும்.

***தொகுப்பு :*** **கீர்த்தனா,**
**இளங்கலை கணினி அறிவியல் இரண்டாமாண்டு ஆ பிரிவு**

## கவிதைகள்

**முத்தம்**

*“அன்பாய் கேட்டாலும்,*
*ஆசையாய் கேட்டாலும்*
*கடனாய் கேட்டாலும்*
*உடனே கிடைத்துவிடுகிறது -*
*குழந்தையின் முத்தம்”*

**அழுகை**

*“ஆங்கிலப் பள்ளியில்*
*குழந்தைகளின் அழுகுரல்*
*‘அம்மா’ என்று”*

**மோ. ரேகா,**
**இளங்கலை கணினி அறிவியல் முதலாண்டு ‘அ’**

***மலர் மருத்துவம்***

# தாழம் பூ

தாழையில் இரண்டு வகையுண்டு. ஒன்று வெண்தாழை, மற்றொன்று செந்தாழை. தாழம்பூவிலிருந்து தைலம் எடுக்கலாம். தலைவலி, வாதவலி முதலியவற்றுக்கு இத் தைலம் உதவு கின்றது.

தாழம் பூவைக் கொண்டு சர்பத் தயாரிக்கலாம். கோடை காலங்களில் உடல் அதிக வெப்பமடைவதை இது சீர்படுத்தும். அம்மை நோய் வராமல் இது தடுக்கும்.

காதுவலி உள்ளவர்கள் தாழம்பூ வினால் தயாரித்த தைலத்தை இரண்டு சொட்டுக்கள் காதினுள் விட்டால் காதவலி விரைவில் குணமடையும்.

**திருமதி.லோ.புனிதவள்ளி,**
**தமிழ் விரிவுரையாளர்.**

# திருக்குறளில் எண்கள்



*மறுவுக மாசற்றார் கேண்மை* ***ஒன்றார்த்தும்***
*ஒருவுக ஒப்பிலார் நட்பு (800)*

***ஒன்று****எய்தி நூறுஇழுக்குஞ் சூதர்க்கும்*
*உண்டாம்கொல்*
*நன்றுஎய்தி வாழ்பதோர் ஆறு (931)*

*எண்ணென்ப ஏனை எழுத்தென்ப*
***இவ்விரண்டும்***
*கண்ணென்ப வாழும் உயிர்க்கு (392)*

*தானம் தவம்* ***இரண்டும்*** *தங்கா*
*வியன்உலகம்*
*வானம் வழங்காது எனின் (19)*

*மிகினும் குறையினும் நோய்செய்யும்*
*நூலோர்*
*வளிமுதலா எண்ணிய* ***மூன்று*** *(941)*

*அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல்*
***நான்கும்***
*இழுக்காறு இயன்றது அறம் (35)*

*பகைபாவம் அச்சம் பழியென* ***நான்கும்***
*இகவாவாம் இல்இறப்பான் கண் (146)*

*பொருள்கருவி காலம் வினைஇடனொடு*
***ஐந்தும்***
*இருள்தீர எண்ணியச் செயல் (675)*

*வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம்*
*பூதங்கள்*
***ஐந்தும்*** *அகத்தே நகும். (271)*

***ஐந்து****அவித்தான் ஆற்றல் அகல்விசும்பு*
*ளார்கோமான்*
*இந்திரனே சாலும் கரி (25)*

*ஒருமையுள் ஆமைபோல்* ***ஐந்து****அடக்கல்*
*ஆற்றின்*
*எழுமையும் ஏமாப்பு உடைத்து (126)*

*பல்லார் பகைகொளலின்* ***பத்தடுத்த***
*தீமைத்தே*
*நல்லார் தொடர்கை விடல் (441)*

*அவிசொரிந்து* ***ஆயிரம்*** *வேட்டலின்*
*ஒன்றன்*
*உயிர்செகுத்து உண்ணாமை நன்று.*
*(259)*

*வகுத்தான் வகுத்த வகையல்லால்*
***கோடி***
*தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது (377)*

*அடுக்கிய* ***கோடி*** *பெறினும்*
*குடிப்பிறந்தார்*
*குன்றுவ செய்தல் இலர் (951)*

**முனைவர் மா. கார்த்திகேயன்,**
**தமிழ்த்துறைத்தலைவர்.**

# வாழ்வினிக்கும்

*"அன்பாய் சொல்லு*
*அழகாய்கொஞ்சும் குழந்தைமனம்!*
*அகட்டி சொல்லு*
*அலட்சியப்படுத்தும் அதேமனம்!*
*பண்பாய் வாழ்ந்து*
*பாரதம்காத்தது பலமனம்!*
*பகைத்துக்கொண்டு பழித்துப்பேசும்*
*பண்பிழந்த சிலமனம்!*
*நன்மையென்று நாழுமுறை*
*சொல்லுமுந்தன் உள்மனம்!*
*தீமையென்று நாழுபேரால்*
*பேசப்பட்டால் ஒருகணம்,*
*சிந்தித்து செயல்பட்டால்*
*வாழ்வினிக்கும் அக்கணம்!*
*இன்பமென்று நினைத்துவாழு*
*இனிக்கும் பழம் - வாழ்வு*
*துன்பமென்று வெறுத்துபோனால்*
*நுனிசுவைத்த கரும்பு."*

**ச. கேசவன்,**
***இளங்கலை இயற்பியல் மூன்றாமாண்டு.***

# மண்ணின் மகள்

*"இன்னும் உறக்கமா? என் தோழி!*
*சற்று புரண்டு பார்,*
*உன்னருகில் யாருமில்லை.*
*உன் இமைகளை மெல்லதிற*
*உன் துயில் கலைய*
*கதிரவன் காத்திருக்கிறான்*
*அவன் விரல் பற்றி எழுந்திரு*
*அன்னையானவள் போர்த்திய*
*அன்புப் போர்வையை விலக்கிடு.*
*வருணன் உன்மேல் பூக்களைத்*
*தூவுகிறான் மழைத்துளியாய்*
*சோம்பலை உதறு துள்ளி எழு*
*உன் தோழிகள் உன் வரவுக்கு*
*பச்சைக் கொடி காட்டுகிறார்கள்*
*வண்ணமலர் உடை அணிந்து வா*
*உன்னுடன் கைகோர்த்து*
*விளையாட உலகமே*
*காத்திருக்கு உனக்காக*
*எழுந்து வா!*

*உன் அழகிய முகம் காட்டி*
*எங்கள் அன்பை ஏற்றுக்கொள்.*
*இப்படிக்கு,*
*மரம்."*

**சௌ. பிரியதர்ஷினி,**
***இளங்கலை வணிகவியல் (கணினி)***
***இரண்டாமாண்டு,*** கே.எஸ்.ஆர். கலை
அறிவியல் மகளிர் கல்லூரி.

# தாய்

*"மனிதன் தேடித்தேடி அலைந்தாலும்*
*திரும்பவும் கிடைக்காத*
*ஒரே சிம்மாசனம்*
*தாயின் கருவறை"*

**சு. பிரியா,**
***இளங்கலை வணிகவியல் (கணினி)***
***இரண்டாமாண்டு,*** கே.எஸ்.ஆர். கலை
அறிவியல் மகளிர் கல்லூரி.

# 'காதுவலி, மூலநோய், பல்வலி' சில தீர்வுகள்

முனைவர் **ப. இராஜேஷ்,**
தமிழ் விரிவுரையாளர்

## *காதுவலி* :

காதுவலி நோய்க்கு நான்கு வகையான மருத்துவமும் மூலநோய்க்கு மூன்று வகையான மருத்துவமும், பல வகையான மருந்துப் பொருள்களையும் பயன்படுத்து கின்றனர்.

விதைகள் நீக்கப்பட்ட இரு வத்தல் மிளகுகளை எரியும் நெருப்பில் சூடாக்கிப் பொடித்து, ஆட்டுப்பாலுடன் கலந்து காதில் ஒரு நேரம் ஊற்றினால் குணமடையும்.

ஐம்பது மில்லி தேங்காய் எண்ணெய்யும், மூன்றுதுண்டு வெள்ளைப் பூண்டையும் கலந்து காய்ச்சி சூடு ஆறியபின் அரைச்சங்கு அளவு ஒரு நேரம் காதில் ஊற்ற வேண்டும் என்பர்.

கற்றாழை இலையைத் தீயில் வாட்டிப் பிழிந்து சாற்றினைக் காதில் விடவேண்டும். அப்போது காதுவலியை அகற்ற முடியும்.

காயத்திருமேனி எண்ணெய் (மூன்றுதுளி) இரண்டு நேரம் காதில் ஊற்றினால் குணமடையும்.

## *மூலநோய்* :

காரம் குறைந்த ஆமைக்கறி, பச்சைநிறத்தவளைக் கறி, இவற்றில் ஏதேனும் ஒன்றை ஒரு நேரம் சாப்பிட்டால் இந்நோய் குணமடையும்.

நாவல்பட்டை (மூன்றுதுண்டு) சீரகம் (சிறிதளவு) இரண்டையும் பசுவெண் ணெய்யுடன் சேர்த்து அரைத்து பசும்பாலில் கலந்து கொடுத்தால் குணமடையும் என்பர். பன்றி இறைச்சியைக் கறியாகச் சமைத்துக் கொடுத்தால் இந்நோயினைத் தீர்க்க முடியும்.

## *பல்வலி* :

பல்வலிக்கு ஆறுவகையான மருத்து வமும் பல மருந்துப் பொருட்களும் பயன்படுத்தப் படுகின்றன.

மிளகு (பத்து), வெள்ளைப்பூண்டு (மூன்றுதுண்டு) ஆகியவற்றை அரைத்துப் பல்வலி உள்ள இடத்தில் ஒருநேரம் மட்டும் வைக்கின்றனர்.

கண்டாங்கிபாச்சோலை (ஒன்று), தேங்காய் எண்ணெய்யுடன் சேர்த்துக் வடிகட்டி, கொதிக்கவைத்து ஒருநேரம் ஒத்தடம் கொடுக்கின்றனர்.

கிராம்பினைப் பொடித்துப் பல் வலியுள்ள இடத்தில் இரண்டுநேரம் வைக்க வேண்டும். இவ்வாறு செய்தால் குணமடையும் என்பர்.

மூன்று துளி கடல் ஆமணக்குப் பாலைப் பல்வலியுள்ள இடத்தில் ஒருநேரம் வைக்கவேண்டும்.

நாயுருவி வேரை (மூன்றுதுண்டு) இடித்துப் பல்வலியுள்ள இடத்தில் வைத்தால் குணமடையும்.

மிளகினைப் பொடித்து பல்வலியுள்ள இடத்தில் வைக்கவேண்டும்.

## காதுவலி, மூலநோய், பல்வலி நீக்கும் மருத்துவ முறைக்குரிய விரிவான அட்டவணை

| மருத்துவம் | மருந்துப் பொருளின் அளவு | செய்முறை | கொடுக்கும் அளவு | கால அளவு |
|---|---|---|---|---|
| **காதுவலி** | | | | |
| வத்தல்மிளகு, ஆட்டுப்பால் | இரண்டு வத்தல் மிளகு, அரைத்தம்ளர் ஆட்டுப்பால் | பொடித்தல் சூடாக்குதல் | கால்சங்கு அளவு | ஒருநேரம் (காலை) |
| தேங்காய் எண்ணெய், வெள்ளைப்பூண்டு | ஐம்பது மில்லி தேங்காய் எண்ணெய், மூன்றுதுண்டு, வெள்ளைப் பூண்டு | காய்ச்சுதல் | அரைச்சங்கு அளவு | ஒரு நேரம் (மாலை) |
| கற்றாழை | ஒரு நீளமான கற்றாழை இலை | சாறுஎடுத்தல் | மூன்றுதுளி | ஒருநேரம் (மாலை) |
| காயத்திருமேனி எண்ணெய் | - | - | மூன்றுதுளி | இரண்டு நேரம் (காலை,மாலை) |
| **மூலநோய்** | | | | |
| ஆமை, | ஆமைஒன்று, | கறிவைத்தல் | - | தினமும் ஒரு நேரம் (மதியம்) |
| பச்சைத்தவளை | பச்சைத்தவளை (ஒன்று) | கறிவைத்தல் | - | தினமும் ஒரு நேரம் (மதியம்) |
| நாவல்பட்டை, சீரகம், பசுவெண்ணெய், பசும்பால் | நாவல்பட்டை மூன்றுதுண்டு, சிறிதளவு சீரகம், பசுவெண்ணெய் (ஒரு உருண்டை) அரைத்தல், கரைத்தல் | அரைத்தல், கரைத்தல் | ஒருதம்ளர் அளவு | தினம்ஒரு நேரம்(மதியம்) குறிப்பு-உணவு சாப்பிட்ட பிறகு |
| பன்றி இறைச்சி | கால்கிலோ பன்றி இறைச்சி | கூட்டுவைத்தல் | - | ஒரு நேரம் (மதியம்) |
| **பல்வலி** | | | | |
| மிளகு, வெள்ளைப்பூண்டு | பத்து நல்ல மிளகு, மூன்று துண்டு வெள்ளைப் பூண்டு | அரைத்தல் | சிறிதளவு | ஒருநேரம் (காலை) |
| கண்டாங்கிபாச்சோலை, தேங்காய் எண்ணெய். மிளகு, வெள்ளைப்பூண்டு | ஐம்பது மில்லி, தேங்காய் எண்ணெய், ஒரு கண்டாங்கி பாச்சோலை | ஒத்தடம் | - | ஒருநேரம் (காலை) |
| கிராம்பு | மூன்று துண்டு கிராம்பு | பொடித்தல் | சிறிதளவு | இரண்டு நேரம் (காலை, மாலை) |
| கடல் ஆமணக்குப் பால் | மூன்றுதுளிப்பால் | - | - | ஒருநேரம் (காலை) |
| மிளகு | பத்து மிளகு | பொடித்தல் | சிறிதளவு | இரண்டு நேரம் (காலை, மாலை) |

# மரியா மாண்ட்டிசோரி

மரியா மாண்ட்டிசோரி (1870-1952) இத்தாலியைச் சேர்ந்த கல்வியாளர் மற்றும் மனோதத்துவ மருத்துவருமாவார்.

இத்தாலியில் மருத்துவ பட்டம் பெற்ற முதல் பெண். இவர் சிறு குழந்தைகளைப் பயிற்றுவிக்க ஒரு புதிய முறையை உருவாக்கி 1907ஆம் ஆண்டு ரோம் நகரில் தனது பள்ளியில் அறிமுகப்படுத்தினார்.

இவரது முறையைப் பின்பற்றிக் கல்வி கற்ற குழந்தைகள் சிறு வயதிலேயே விளையாட்டை விட வேலையில் சாதிக்க அதிக ஆர்வம் காட்டினர். தொடர்ந்து மூளைக்கு வேலை கொடுத்தாலும் அதிகம் களைப்படைவதில்லை. இதனால் இவரது முறையை ஐரோப்பா முழுவதும் பயன்படுத்தத் துவங்கினர்.

நெதர்லாந்தில் மிகப் புகழ் வாய்ந்த ஆசிரியப் பயிற்சிப் பள்ளியை நிறுவினார். பின்னாளில் 1939 முதல் 1947 வரை இந்தியாவிலும் இலங்கையிலும் பணியாற்றினார்.

இவரது கல்வி முறை குழந்தைகள் தாமாக முன்வந்து செயல்படுவதற்கும், தனது தேவைகளைத் தானே செய்து கொள்ளவும் வழி செய்கின்றது.

இந்த முறையில் நடக்கும் வகுப்புகளில் ஆசிரியர்கள் இல்லை. மாறாக, அவர்கள் வழிநடத்துபவர்கள் என்றே கருதப் படுகின்றார்கள்.

குழந்தைகள் புதியவற்றைத் தாமாக முன்வந்து கற்றுக்கொள்ளவும் அவர்கள் தவறான பழக்கங்களைக் கற்றுக் கொள்ளாமலும் குழந்தைகளின் முயற்சி கள் வீணாகிப் போகாமலும் பார்த்துக் கொள்வதே இந்த வழிநடத்து பவர்களின் பணியாகும்.

***ப. சரவணன், தமிழ் விரிவுரையாளர்.***

# பசுமைப்புரட்சி

*"பசுமையில்லாத நாடு*
*உயிரில்லாத மனிதனைப் போல*
*பசுமையில்லாத காடு*
*இலையில்லாத மரத்தைப் போல*
*பசுமையில்லாத பூமி*
*தண்ணீர் இல்லாத தேசம் போல*
*பசுமையில்லாத வாழ்க்கை*
*ஆக்ஸிஜன் இல்லாத காற்று போல.*
*ஆகவே,*
*மழையைப் பெருக்கிட*
*வெப்பத்தைக் குறைத்திட*
*ஓசோனைக் காத்திட*
*நிலத்திடை நீரை உயர்த்திட*
*மண்ணின் வளமையைக் காத்திட*
*அனைவரும் ஒன்றாய் போராடுவோம் !*
*பசுமைப்புரட்சியைப் பெருக்கிடுவோம்!"*

***சி.கார்த்தி,***
***இளங்கலை வணிகவியல் மூன்றாமாண்டு***
***ஆ பிரிவு***

# படித்து வியந்தவை

த. நதியா,
இளங்கலை கணினி அறிவியல் இரண்டாமாண்டு
'அ' பிரிவு

01

பூனை, மாடு இவற்றின் கண்கள் இருட்டில் பளபளவென்று ஒளிவீசுவதைப் பார்த்திருப்பீர்கள். இது ஏன் என்று யோசித்திருக்கிறீர்களா? இத்தகைய விலங்குகளால் இரவில் நன்றாகப் பார்க்க முடியும். நமக்கு, இருட்டில் பொருட்கள் மங்கலாகத் தெரியும். ஆனால் பூனை, மாடு போன்ற விலங்ககளுக்கு இரவில் பார்வை நன்றாகத் தெரியும். 'காரணம் இதன் கண்களில் ஒரு மெல்லிய படிகப் பொருளினால் உருவாக்கப்பட்ட திசு உள்ளது. இந்தத் திசுக்களின் மீது விழும் ஒளி பிரதிபலிக்கப்பட்டு பள பளக்கிறது. படிக அடுக்கு இல்லாத விலங்கினத்தின் கண்கள் பளபளப்ப தில்லை. அவற்றின் கண் பார்வை இருட்டில் மிகவும் குறைவாகவே தெரியும். அதிக இரத்தக் குழாய்கள் இருந்தால் அக்கண்களில் இருந்து சிவப்பு நிறத்தில் ஒளிவீசும். இரத்தக் குழாய்களின் எண்ணிக்கை குறைந்தால் நீலம், வெளிர் நீலம், வெள்ளை என அவற்றின் நிறம் மாறி மாறித் தெரிவும்.

02

பல்லி வகையைச் சேர்ந்த பச்சோந்திகள் மரங்களிலும், புதர், காடுகளிலும் வசிச்கின்றன. இவை பெரும்பாலும் பூச்சிகள் உணவாக உட்கொள்கின்றன. இதனுடைய வித்தி யாசமான அமைப்பாக விளங்கக் கூடியவை இரண்டு கூம்பு ஒன்றுக் கொன்று தொடர்பில்லாமல் செயல்படக்கூடிய வகையில் உள்ளன. இதனால் பச்சோந்திகளால் ஒரு கண்ணால் முன்புறமும் மற்றொரு கண்ணால் பின்புறமும் பார்க்க முடியும். பச்சோந்திகள் இதற்குத் தகுந்தவாறு தங்களது நிறத்தை மாற்றிக் கொள்ளும் திறன் உடையது. இவை பூச்சிளைப் பார்க்கும்போது தன்னுடைய பெரிய நாக்கினை வெளிக்கொண்ர்ந்து தனது உணவைப் பிடித்து மறுபடியும் வாய்க்குள் இழுத்துக் கொள்ளும் தன்மை படைத்தவை.

03

பாதுஷா ஔரங்கசீப்பின் அரசவைப் புலவரான 'தஜ்ஹிர்' என்ற அராபியக் கவிஞர் ஊதியமாகப் பணமோ, மானியமோ பெறவில்லை. ஆண்டுக்கு இரண்டு பிடி வைரங்கள் பெற ஒப்புக் கொண்டார். நபிகள் நாயகத்தின் பிறந்த தினத்தன்று கருவூலத்துக்குள் சென்று வைரங்கள் நிறைந்த பெரிய பையில் கைகளை விட்டு பிடி நிறைய அள்ளி எடுப்பார். இவ்வாறு பத்தாண்டுகள் எடுத்துக் கொண்டார்.

04

ஆப்பிரிக்காவின் லோச்சா காட்டிலுள்ள எறும்புகள் மழைக்காலம் வருமுன் வீடு கட்டிக் கொள்ளும். மழைக்காலம் அடுத்தடுத்த வருவதால் இவ்வூர் எறும்புகள் ஒவ்வொரு தடவையும் முன்னால் கட்டியவற்றின் மேலேயே மாடி வீடு கட்டி வாழ்கின்றன.

05

புத்தாண்டு 15 தினங்கள் கொண்டாடப் படுகிறது. 'கய்நியன்' என்ற தினமே முதல் தினம் அந்தத் தினத்தில் சைனர்கள் தங்கள்

கடைகளைத் திறந்து வைத்து வியாபாரம் செய்கிறார்கள். பிறகு விருந்து 2,4,6,8 ஆவது தினங்கள் பெரிய அளவில் நடை பெறுகிறது. ஏழாவது தினம் மனித இனத்தின் பிறந்த தினம். அந்த தினத்தில் வேக வைக்காத 'சாங்சாவ்' எனப்படும் பச்சைக் காய்கறிகள், 'ஈசங்' எனப்படும் சமைக்கப்படாத மீன்களையே உணவாகக் கொள்கின்றனர். 9-ஆவது தினம் 'டியன்காங்' (ஜேட்அரசர்) பிறந்ததினம் 8-ஆம் தின இரவு முதலே சைனர்கள் ஜேட் அரச கோயில்களுக்குச் சென்று வழிபடுவர்.

'சாப் கோ மே' –பதினைந்தாவது தினம், சிங்கம் அல்லது டிராகன் நடனத்துடன் விழா நிறைவுறும். அந்த தினத்தில் சைனர்கள் தங்கள் குடும்பத்தினம் நண்பர்கள் ஆகியோருடன் ஒன்றாக இருந்து உணவருந்தி மகிழ்வர். இளம்பெண்கள் அன்று இரவு ஆரஞ்சுகளைக் கடலில் எறிவர். தங்களுக்கான இல்வாழ்க்கைத் துணை நன்றாக அமையும் பொருட்டு பிரார்த்தனை செய்வர்.

# அருகம்புல்

**மு.ஸ்ரீ. வனிதாதேவி,**
இளங்கலை வணிகவியல் (கணினி) மூன்றாமாண்டு,
கே.எஸ்.ஆர். கலை அறிவியல் மகளிர் கல்லூரி.

அருகம்புல் வயல் வரப்புகளிலும் வெட்ட வெளிகளிலும் வளரும். குறுகலான, நீண்ட இலைகளுடனும் நேராக வளரும் தண்டுகளுடனும் தன்னிச்சையாகவே வளரும். தண்டு மெல்லியதாக, முனை ஊசி போல் கூர்மையாகக் காணப்படும். கரும்பு போல் சிறுசிறு கணுக்களைப் பெற்றிருக்கும். அருகம்புல்லில் பச்சையம் நிறைந்துள்ளது.

இயற்கை மருத்துவத்தில் அருகம்புல், அனைத்து நோய்களுக்கும் மருந்தாகப் பரிந்துரைக்கப்படுகிறது. இயற்கை வாழ்வியல், உணவு மருத்துவத்தில் அருகம்புல் சாறு முதலிடம் பெறுகின்றன.

அருகம்புல் காரத்தன்மை உடையது. அருகம்புல்லில் உயிர்ச் சத்துகளும் தாது உப்புகளும் நிறைந்துள்ளன.

அருகம்புல் தளர்ச்சியை நீக்கி உடலுக்கு உறுதியைத் தரவல்லது. உடலில் சேரும் நச்சுத் தன்மைகளை நீக்குகிறது. குருதியின் அமிலத் தன்மையைச் சீர்செய்து குடற்புண்ணைக் (அல்சர்) குணப்படுத்துகிறது.

இரத்தத்தை விருத்தியடையச் செய்து இரத்தச் சோகையை நீக்குகிறது. இரத்த வெள்ளை அணுக்களைத் தூண்டி, உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியினை அதிகரிக்கச் செய்கிறது.

அருகம்புல், நச்சுப் பொருள்களால் உண்டாகும் புற்று நோயைத் தடுப்பதாகக் கருதுகின்றனர். அருகம் புல்லில் இன்சுலின் நிறைந்துள்ளதால், நீரிழிவுக்கு நன் மருந்தாக விளங்குகிறது. நாளமில்லாச் சுரப்பி களின் இயக்கத்தைச் சீர் படுத்துவதால் 'ஆஸ்துமா' நோயிலிருந்து விடுதலை பெற உதவுகிறது.

அருகம்புல் அதிகப்படியான உடல் வெப்பத்தைத் தணிக்கிறது. மலச் சிக்கலை நீக்கி உடல் நலத்தை மேம்படுத்துகிறது. தோல் நோய்க்கும் சேற்றுப் புண்ணுக்கும் அரிய மருந்து அருகம்புல்.

காலை வேளையில் வெறும் வயிற்றில் அருகம்புல் சாற்றினைப் பருகலாம். ‘உணவைக் குடி, நீரை உண்’ என்ற சொற்றொடரை மனத்திற் கொண்டு சிறிது சிறிதாக உமிழ் நீருடன் சேர்த்துப் பருக வேண்டும். குடித்த இரண்டு மணி நேரத்திற்கு நீரைத்தவிரப் பிற உணவை உட்கொள்ளலாகாது.

நச்சுக் கிருமிகளைக் கொல்லும் ஆற்றல் அருகம்புல்லுக்கு உண்டு. இரத்த நாள அடைப்பு, குருதி ஓட்டத்தடை போன்ற நோயுள்ளவர்கள் அருகம்புல்லை அரைத்துப் பாலில் கலந்து சாப்பிட்டால் நோயின் வேகம் குறையும். உடல் நலம் பெறும்.

அருகம்புல்லுடன் மஞ்சள் சேர்த்து அரைத்து உடலில் பூசிக் குளித்தால் சொறி, சிரங்கு, வேர்க்குரு மறையும். கண் நோய்க்குச் சிறந்த மருந்து அருகம்புல். தீர்க்க முடியாத நோய்களையும் அருகம்புல்லால் குணப்படுத்த முடியும் என்பது சித்த மருத்துவர்களின் கருத்து.

‘அரிய மருந்தென அருகனை அறிவீரே’ என்று மருத்துவ மேதைகளும் மூலிகை ஆராய்ச்சியாளர்களும் அருகம்புல்லைப் புகழ்ந்து கூறியும் எழுதியும் உள்ளனர். ‘நோயற்ற வாழ்வே, குறைவற்ற செல்வம்” எனும் பழமொழிக்கேற்ப அருகம்புல்லைப் பயன்படுத்தி, நோயின்றி நலமாக வாழ முயல்வோமாக!

# இளைஞர்களுக்கு

*“ஏ! இளைஞனே!*
*இன்றைய நாளின் நித்திரையா?*
*நாளைய கனவின் ஒத்திகையா?*

*எல்லை தாண்டி*
*நித்திரை செய்ய*
*உனக்கு அதிகாரமில்லை!*

*உன் வாழ்க்கைப் புத்தகத்தில்*
*இன்னும் நீ முடிக்க வேண்டிய*
*அத்தியாயங்கள் பல....*

*காலன் உன் வாசலுக்குள்*
*வருவதற்குள்*
*விடி காலையுடன்*
*கைகோர்த்துக் கொள்!*
*காரியங்களைக் கச்சிதமாக்கு!*

*உன் விதிபட்ட*
*எல்லைகளைத் தாண்டி*
*கனல் கனவுகளை விசாலம் செய்!*
*உலகம் உன் விலாசம் தேடி வரும்*
*சூரியப் பூவை*
*எட்டிப் பறிக்க*
*உன்னால் முடியுமென நம்பு!*

*தொடுவானம்*
*நீ தொடக் காத்திருக்கின்றது...*
*சாதி மத பேதங்கள்*
*நிலை குலைந்து*
*சமத்துவம் பேசுகின்றன.....*
*சகோதரத்துவம்*
*சமத்துவம் என்ற*
*வார்த்தைகள் எல்லாம் - இங்கே*

*செல்லாக் காசாகித்*
*தெருவில் திரிகின்றன...*
*சுதந்திரக் காற்றுக் கூட*
*இன்னும் சரிவர*
*சுத்திகரிக்கப்படவில்லை....*
*மனிதநேய மலர்கள்*
*இம்மண்ணில் சுதந்திரமாக*
*மலரும் போதுதான்*
*மாறும் மகத்துவம் பெறும்...*
*அந்தத் திருநாள்*
*நம்மனித ஆன்மாக்களின்*
*மறுமலர்ச்சிப் பெருநாளாய்*
*இவ்வுலக மெங்கும் வலம் வரட்டும்!*
*மனித நேயம் மலரட்டும் !"*

**ஜி. சிவரஞ்சனி,**
***இளங்கலை கணிதம் மூன்றாமாண்டு,***
**கே.எஸ்.ஆர். கலை அறிவியல் மகளிர் கல்லூரி.**

# என் தமிழ்மொழி

*"காகித பூக்கள்*
*வாசத்தை இழந்தாலும்*
*வாடிப் போவதில்லை......*
*மலை அருவி*
*சலசலப்பு குறைந்தாலும்*
*சலித்துப் போவதில்லை.....*
*மாலைச் சூரியன்*
*மறைந்து போனாலும்*
*மட்கிப் போவதில்லை.......*
*தமிழ்மொழி -*
*ஆதிக்கம் குறைந்தாலும்*
*அழிந்து போவதில்லை"*

**ரா. ஹரீஷ்,**
**இளங்கலை இரண்டாமாண்டு கணினி**
**பயன்பாட்டியல் 'அ' பிரிவு**

# ஜேம்ஸ் ஆலனின் சிந்தனைகள்


ஜேம்ஸ் ஆலன் இங்கிலாந்து நாட்டிலுள்ள லீசெஸ்டர் என்ற ஊரில் நவம்பர் 28ஆம் தேதி, 1864- இல் பிறந்தார்.

தனது 17 வயதில் ஸேக்ஷ்பியரது நாடகங்களைப் படித்தார். பல பகுதிகளை மனப்பாடம் செய்திருந்தார். இளைஞன் ஆலனுக்குப் பலகீனமான உடம்பு இருந்தும் நிறைய நூல்களைப் படிப்பதும், வாழ்வின் பிரச்சினை களையும், ஆத்மாவைப் பற்றியும் ஆழமாக யோசித்தார். தனது 24வயதில் எட்வின் ஆர்னால்டு எழுதிய 'ஆசியஜோதி' என்ற புத்தருடைய வாழ்க்கை வரலாற்று (ஆங்கிலம்) நூலைப் படித்தார்.

அந்தப்புத்தகம் அவருக்கு வாழ்வின் திருப்பத்தை ஏற்படுத்தியது. ஜேம்ஸ் ஆலன் எழுதிய நூல்களுள் "மனிதன் எண்ணுவது போல" (As a Man Thinketh) என்னும் நூல் வாழ்வின் பேருண்மைகளை விளக்கிக் கூறுவ தாகும்.

### ஜேம்ஸ் ஆலனின் சிந்தனைகள்

ஜேம்ஸ் ஆலன் நல்லொழுக்கம்தான் சிறந்த ஆபரணம் என்று கருதினார். குறிப்பாக மனவியல் பற்றிய அவரது சிந்தனைகள் ஒவ்வொரு மனிதனும் பின்பற்ற வேண்டியவையாகும். மனிதன் எந்த எண்ணங்களைத் தேர்ந்தெடுத்து வளர்க்கிறாரோ அதற்கேற்பவே உருவா கிறான் என்று ஜேம்ஸ் ஆலன் குறிப்பிடுகின்றார்.



**James Allen**
**(1864–1912)**

"குணங்கள் என்ற நமது உள்ளாடையையும், சூழ்நிலை என்ற வெளி ஆடையையும் நெய்யும் நெசவாள நிபுணர் நமது மனம்கொள்" என்பது அவரது ஆழமான கருத்தாகும்.

மனிதன் தான் செய்யும் ஒவ்வொரு செயலிலும் பின்னடைவு ஏற்படும் பொழுதெல்லாம் தன்னுடைய சூழ்நிலையைக் குறைசொல்லுபவனாகிறான். இது தவறான அணுகுமுறையே காட்டுகின்றது என்பார் ஆலன்.

"சூழ்நிலை மனிதனை உருவாக்குவதில்லை. அடிப்படையில் இன்ன மனிதன் தான் உள்ளே இருக்கிறான் என்பதை அவனுக்குக் காட்டிக் கொடுக்கிறது" என்பது அவர் கண்டுணர்ந்த உண்மையாகும்.

ஒரு மனிதன் உயர் நெறிகளுடன், மகிழ்வுடன் வாழ்வதற்கும் அவன் தன் மனத்தில் பயிரிட்டு வளர்த்து வந்த உயர் எண்ணங்களும், லட்சியங்களும் தான் காரணம் என்று ஆலன் கூறுகின்றார்.

"பிச்சைக்கார விடுதிக்கோ அல்லது சிறைக்கோ ஒரு மனிதன் விதியின் கொடுமைகளினால் வந்து சேர்வதில்லை: அவனது கீழ்த்தரமான ஆசைகளாலும், எண்ணங்களாலுமே வந்து சேருகிறான். என்பது யாவரும் அறிய வேண்டியவையாகும் என்று ஜேம்ஸ் ஆலன் வலியுறுத்துகின்றார்.

*மேலும் விபரங்களுக்கு:*

**http://en.wikipedia.org/wiki/James_Allen_(author)**

**- திரு.வீரா. முருகானந்தம்,**
**தமிழ் விரிவுரையாளர்.**

***மாதம் ஒரு படைப்பாளர்***

## எழுத்தாளர் அ. முத்துலிங்கம்

இலங்கை கொக்குவில் கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்ட அ. முத்துலிங்கம், அப்பாத்துரை ராசம்மா தம்பதிகளுக்கு பிறந்த ஏழு பிள்ளைகளில் ஐந்தாவது ஆவார். கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பயின்ற இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் படிப்பை முடித்தபின் இலங்கையில் சாட்டர்ட் அக்கவுண்டனாகவும், இங்கிலாந்தின் மனேஜ்மெண்ட் அக்கவுண்டனாகவும் பட்டம் பெற்றவர். பணி நிமித்தமாக பல நாடுகளுக்கு பணித்திருக்கும் இவர் ஏறத்தாழ இருபது ஆண்டுகள் உலக வங்கியிலும், ஐக்கிய நாடுகள் சபையின் OPS பிரிவிலும் முக்கியமான பதவிகளில் கடமை யாற்றி தற்சமயம் ஓய்வுபெற்று தன் மனைவி கமலரஞ்சினியுடன் வசிப்பது கனடாவில். இவரின் மகன் சஞ்சயனும், மகள் வைதேகியும் வசிப்பது அமெரிக்காவில்.

அ.முத்துலிங்கம், பேராசிரியர் க.கைலாசபதியால் எழுத்துலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர். இலங்கை தினகரன் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற 'அக்கா'

சிறுகதையை தலைப்பாகக் கொண்ட இவரின் முதல் தொகுப்பு திரு க.கைலாசபதியின் அணிந்துரையுடன் 1964ல் வெளியானது. நீண்டகால இடைவெளிக்கு பிறகு 1995ல் மறுபடியும் எழுதத் தொடங்கி சிறுகதைகள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள், நேர்காணல்கள், புத்தக மதிப்புரைகள், நாடக, சினிமா விமர்சனங்கள் என்று எழுதி வருகிறார். இருபதுக்கு மேற்பட்ட வெளிநாட்டு ஆங்கில எழுத்தாளர்களுடன் இவர் நடாத்திய நேர்காணல் கட்டுரைகள் தொகுப்பாக விரைவில் வெளிவர இருக்கிறது. தற்போது, கனடாவில் பதிவு செய்யப்பட்ட தமிழ் இலக்கியத் தோட்டம் (Tamil Literary Garden) என்னும் லாப நோக்கற்ற குழுமத்தில் முக்கிய உறுப்பினராக செயலாற்றுகிறார்.

நவீன தமிழ் இலக்கியத்திற்கு ஈழத் தமிழ் தந்திருக்கும் முக்கியமான கொடை என்று அ.முத்துலிங்கம் படைப்புகளைச் சொல்லலாம். அவர் கதைகளில் காணப்படுவது வெவ்வேறு தேசங்கள், வெவ்வேறு கலாச்சாரங்கள், வெவ்வேறு மனிதர்கள். ஆனால் தமிழ் வாசகருக்கு அந்நியப்படாமலும், தீவிரம் சிதைக்கப்படாமலும் அப்புனைவுகள் படைக்கப்பட்டிருக்கின்றன. நாம் அறிந்த உலகங்களுக்கு நாம் அறியாத பாதைகளில் அவை எம்மை இட்டுச் செல்கின்றன் பிரமிக்கவைக்கின்றன. அவரின் பார்வை அதிசயமான கூர்மை கொண்டது. வார்த்தைகளே தன்னை வசீகரிப்பதாக, சிந்திக்க வைப்பதாக, ஆட்கொள்ளுவதாகச் சொல்லும் அ.முத்துலிங்கத்தின் எழுத்தும் நம்மை அதேவிதமான பாதிப்புக்கு உள்ளாக்குகிறது.

**இவரது படைப்புகள்:**

*அக்கா (சிறுகதைத் தொகுப்பு -1964), திகடசக்கரம் (சிறுகதைத் தொகுப்பு - 1995), வம்சவிருத்தி (சிறுகதைத் தொகுப்பு - 1996), வடக்கு வீதி (சிறுகதைத் தொகுப்பு - 1998), மகாராஜாவின் ரயில் வண்டி (சிறுகதைத் தொகுப்பு - 2001), அ. முத்துலிங்கம் கதைகள் (சிறுகதைகள் முழுத்தொகுப்பு - 2004), அங்க இப்ப என்ன நேரம்? (கட்டுரைத் தொகுப்பு - 2005), கடிகாரம் அமைதியாக எண்ணிக் கொண்டிருக்கிறது- (மதிப்புரைகள் தொகுப்பு - 2006), வியத்தலும் இலமே - 2006 (காலச்சுவடு பதிப்பகம்),பூமியின் பாதி வயது (கட்டுரைத் தொகுதி - உயிர்மை பதிப்பகம், சென்னை. முதல் பதிப்பு - 2007),ஒலிப்புத்தகம் - (சிறுகதைகள் தொகுப்பு - 2008),உண்மை கலந்த நாட்குறிப்புகள் (சுயசரிதை) - உயிர்மை பதிப்பகம், சென்னை. முதல் பதிப்பு - 2008)அமெரிக்கக்காரி - சிறுகதைத் தொகுப்பு – 2010 Inauspicious Times - 2008 - (Short stories by Appadurai Muttulingam - translation by Padma Narayanan - available at Amazon.com),*

**இவர் பெற்ற விருதுகள் பரிசுகள்:**

*தினகரன் சிறுகதைப் போட்டி பரிசு – 1961, கல்கி சிறுகதைப் போட்டி பரிசுஜோதி விநாயகம் பரிசு – 1997, திகடசக்கரம் - லில்லி தேவசிகாமணிப் பரிசு – 1995, வம்சவிருத்தி - சிறுகதைத் தொகுப்பு - தமிழ்நாடு அரசாங்கம் முதல் பரிசு – 1996, வம்சவிருத்தி - சிறுகதைத் தொகுப்பு - இந்திய ஸ்டேட் வங்கி முதல் பரிசு – 1996, வடக்கு வீதி - சிறுகதைத் தொகுப்பு - இலங்கை அரசு சாகித்தியப் பரிசு – 1999, கனடா தமிழர் தகவல் - நாற்பது ஆண்டு தமிழ் இலக்கியச் சாதனை விருது - பிப்ரவரி 2006*

-முனைவர் ப. சரவணன்,
தமிழ் விரிவுரையாளர்.

நெடுங்கவிதை:

# கணிதக் கடவுள்

*எம்.சுகன்யா,*
*இளங்கலை மூன்றாமாண்டு கணிதம்*

*“காத்தல் கடவுளாம் திருமால்*
*அந்தப் பெருமாளுக்கு*
*அவதாரங்களோ பத்து*
*அதில் சீனிவாசன் பத்தாம்*
*இராமன் ஒன்றாம்*
*இந்த பத்தும் ஒன்றும்*
*இணைந்த மானுடன்! ஆம்!*
*சீனிவாசனும்- இராமனும் இணைந்த*
*மானுடர்க்காக*
*பதினொன்றாவதாக,*
*சீனிவாச இராமானுஜன் என்ற*
*கணிதக் கடவுளாக...*

*இந்த அவனியிலே அவதரித்த*
*கணித மேதையைப் பற்றி*
*இந்தப் பேதை பற்றி*
*இந்தப் பேதை சில*
*நிமிடங்கள் நினைவு கூர இருக்கிறேன்..*

*கணிதக் களஞ்சியமே உன்னைக்*
*கணித வார்த்தைகளாலேயே*
*இனிதாய் வர்ணிக்கலாமா?*
*என நிர்ணயித்து முயல்கிறேன்*

*வருணிக்க வார்த்தைகள் கிடைக்காமல்*
*வாடிப் போனேன்...*

*கணிதமே!*
*உன் புகழுரைக்க உரை கிடைக்குமுன்*
*எனக்கு நரை கிடைத்து விடுமோ*
*என்ற அச்சம்! ஆயினும்*
*தொடர்கிறேன் என் தன்னம்பிக்கையிலே!*

*ஈரோடு என்றாலே*
*இணையற்ற இருவரை மறக்குமோ*
*இவ்வுலகம் ! ஆம்,*
*பகுத்தறிவுப் பகலவனையும்*
*எண்களையே*
*பகுத்தறிந்து தந்தவனையும்*
*மறக்குமோ? மறக்கத்தான் இயலுமா?*

*ஈரோட்டில் பிறந்த இணைகரனே...*
*அல்ல அல்ல*
*இணைகரம் என்று சொன்னால்*
*அதற்கு இணைகோடுகள் வேண்டுமே?*

*உனக்கு இணையாக இங்கு*
*யாரும் பிறக்கவும் இல்லை !*
*பிறக்கப் போவதும் இல்லை !*

*குடந்தையிலே நீ பள்ளிப் படிப்பைத்*
*தொடங்கையிலே,*
*பயிலும் காலத்திலேயே அந்தப்*
*பாலப் பருவத்திலேயே*
*உன் கணித அறிவால்*

*கேள்விக் கணைகளைத் தொடுத்து*
*அதனால் ஆசிரியர்களை வதைத்து எடுத்து*
*அவர்களைத் திகைக்க வைத்த*
*உன் அறிவைப் பகா எண்*
*என்று எண்ணலாமா?*

*ஆம் !*
*உன் அறிவை*
*இவ்வளவுதான் என்று இயல்பாகப்*
*பகுத்து விட இயலாதே !*

*இடைநிலைத்தேர்வில்*
*கடைநிலையானாய் !*
*சென்னைத் துறைமுகத்தில்*
*உன் பிறைமுகம் பதித்து*
*தாயையும் தாரத்தையும் பிரிந்து*
*ஓர் அரசு ஊழியனாய் முரசுபோல்*
*பணியாற்றிய நீ*
*கணிதத்தில் அறிய வேண்டிய*
*அதிசயங்கள் அளவற்றவை என்பதை*
*அளந்து கற்ற உன் அறிவை*
*அளவியல் என்று சொல்லலாமா?*
*அல்ல அல்ல*
*அந்த அருவியின் ஆழத்தை*

*அளவிடவே இயலாதே!*

*எண்ணியலில்*
*உன்னுடைய பங்கோ*
*எண்ணிலடங்காதது!*

*உன்னுள் புதைத்த*
*கருத்துப் புதையல்*
*கணிதக் கருவூலம்!*

*ஆய்வுக் கட்டுரைகளாக*
*சித்திரங்களென*
*நித்தம் நித்தம்*
*முத்திரை பதித்தது*
*அது பத்திரிக்கையின் மொழியில்*
*ஒத்திகை போல் வெளி வந்தது*
*ஆம்!*
*ஒத்திகை போல் அப்பத்திரிகை*
*வெளிவந்த பின்னரே பலரின்*
*நித்திரை கலைந்து*
*எத்தனை எத்தனை ஆற்றல்*
*என உன் ஏற்றத்தை ஏற்றனர்*
*திசைகள் உன்னைத்*
*திரும்பிப் பார்த்தன*

*தேவையற்றக் காகிதங்களே உன்*
*தோற்றங்களென்னும்*
*ஓவயங்களை ஏந்தும்*
*காவியங்களாயின*

*தேற்றங்களென்னும் ஓவியங்களின்*
*வாயிலாக உன் ஏற்றத்தை*
*அறியாத பேதைகள் இருக்க*
*உன் எதிர்கால மாற்றத்தை*
*அறிந்த ஹார்டி என்ற மேதையால்*

*கேம்பிரிட்ஜ் -ல்*
*கற்க வாய்ப்புப் பெற்றாய் !*

*அந்தணனாய்*
*அவதரித்த நீ*
*குடுமியை வெட்டக் கூடாதென்ற*
*கடுமையான கட்டளையை வெட்டியதோடு*
*கட்டிய குடுமியையும்*
*வெட்டியெறிந்தாய் !*

*அது மட்டுமா ?*
*அந்தணனாய்ப் பிறந்தால்*
*ஆழி தாண்ட இயலாதென்ற*
*வேலியைத் தாண்டி*
*கடல் கடந்து சென்று கற்றாய்!*
*பட்டமும் பெற்றாய் !*

*என்களே கண்களென*
*எப்போதும் எண்களோடு*
*ஒன்றுபட்ட நீ !*
*காசநோய் என்னும்*
*நாசநோய் வசப்பட்டாய் !*

*எக்கணமும் கணிதம்*
*காணும் கணிதக்கழகம் நீ !*
*ஆம் !*
*நோய்ப்பட்ட கணமும்*
*நீ பார்த்த டாக்ஸி எண் 1729.*

*அதை எண்ணும் போது,*
*கண்களை இமைக்கும் நேரத்தில்*
*எண்களைச் சுமக்கும்*
*உன் இதயத்தின் ஓரத்தில்*
*அவ்வெண்ணின் இயல்பை*
*இனிதாய் நீ*
*விளக்கியதோ மகிழ்ச்சி !*

*அதை நினைத்தாலோ*
*மனத்தில் ஏதோ ஒரு நெகிழ்ச்சி !*
*உன் பெயர் பெற்று அழைக்கப்படுவதோ*
*அவ்வெண் கொண்ட புகழ்ச்சி !*

*எண்ணங்களைப் போல*
*எண்களுக்கு உயிர்கொடுத்த மேதையே !*
*எண்பதுகளில் மலர்ந்து*
*தொண்ணூறுகளில் உதிர்ந்த*
*பொற்றாமரை மலரே!*

*படைப்பது, காப்பது, அழிப்பது*
*இவற்றைக் கணக்கு செய்வதில்*

*கடவுளே மந்தமோ?*
*ஆம்!*
*அதனால்தான்*

*உன்னை*
*முப்பதுகளிலேயே*
*எங்களிடமிருந்து பறித்துக் கொண்டான் !*

*அதுமட்டுமல்ல...*
*உன்னை அழைத்துக் கொண்ட*
*பின்புதான் கடவுள் செய்தான்*
*இந்த உலகத்தைக்*
*கணிதக் கழகமாக !*

*உன்னடைய தேற்றங்களே*
*எங்களின் தோற்றங்களை*
*உலகறியச் செய்கின்றன !*

*கணிப்பொறியைக் காட்டிலும்*
*வேகமாக இயங்கிய*
*கணிதப் பொறியே!*

*விண்வெளியில் சென்று பார்த்தால்*
*மின்னொளியில் மிளிரும்*
*சீனப் பெருஞ்சுவர்தான் தென்படுமாம்*
*பரிதிபோல் பளிச்சென்று !*
*உன்புகழை எழுத எண்ணினேன்*
*அவ்வளவு பெரிய சீனப்பெருஞ்சுவரும்*
*சிறியதாகத்தான் தோன்றியது*
*எனக்கு !*


*நீதிபதிகள்*
*மரணதண்டனையை எழுதிவிட்டு*
*தன் பேனா முனையை*
*உடைப்பது வழக்கம். ஆனால்*
*உன் மரணத்தை எழுதிவிட்டு*
*காலன் தன்*
*கட்டை விரலையே*
*உடைத்திருப்பானோ?*
*என்ற சிந்தனைதான் எனக்கும் !*

*சிற்பியே !*
*நீ செதுக்கிக் கொண்டிருக்கம்*
*சிலைகளாய் நாங்கள்*
*என்றும் உன் வழியில் ....*
*கணிதத்தின் விழிகளாய் !*

*தேற்றம் ஒவ்வொன்றையும் காணும்போது*
*இராமனுஜத்தின் தோற்றம்தான்*
*நம்மன்னே நிற்கிறது !*

*சூத்திரங்களைக் கொண்டே*
*சரித்திரங்களைக் கண்ட*
*சாதனை நாயகன் ! இராமானுஜன் ...*

*இவனது புகழுரைக்க உரை கிடைக்குமுன் எனக்கு நரை கிடைத்து விடும் என்றெண்ணியே*
*இத்துடன் முடிக்கின்றேன் என்னுரையை...*
*நன்றி, வணக்கம்...”*



**அட்டை ஓவியங்கள்**

**முன்பக்க அட்டை:**
***சௌந்தர்யா***
இளங்கலை துகிலியல்துறை
இரண்டாமாண்டு
**பின்பக்க அட்டை:**
***எஸ். திரவிண்யா***
இளங்கலை கணிதம்
இரண்டாமாண்டு

தொடர் செய்யுள் : பகுதி - 07

**கே.எஸ்.ஆர். பிள்ளைத் தமிழ்**



# 7. அம்புலிப் பருவம்

*அம்புலி என்னும் முழுநிலவினை (கே.எஸ்.ஆர். ஆகிய குழந்தையுடன் விளையாட வருமாறு அழைப்பது இப்பருவம் ஆகும். குழந்தையின் 18 –ஆம் திங்களில் இது நிகழும். பிள்ளைத்தமிழ் இயற்றும் புலவர்க்குக் கடினமான பகுதி இந்த அம்புலிப்பருவம் ஆகும். "பிள்ளைத்தமிழுக்கு அம்புலி புலி" என்பது ஆன்றோர் வாக்கு. சாம, பேத, தான, தண்டம் என்னும் நான்கு வகை உபாயங்களையும் பயன்படுத்தி அம்புலியை அழைப்பது இப்பகுதியின் பெரும் சிறப்பு ஆகும்.*

நேற்றுநீ நிறைநிலா என்கிற போதிலும்
சில தினத்தில் தேய்ந்து போவாய்!
நேரத்தில் வானத்தில் வந்தாலும்
மேகத்தில் நின்னழகு மறைந்து போகும்:
ஆற்றிலே படகுபோல் அவ்வானில்
வந்தாலும்
அடைஅமா வாசை நாளில்
அங்கிருந் தகன்றுநீ காணாமல்
போகிறாய்
அவையெல்லாம் குறைகள் என்றே
சாற்றினர் பெரியோர்கள் :
அவையெல்லாம் எங்களின்
செல்வனுக்(கு) இல்லை கண்டாய்!
சரிவடையும் நின்கலை: சரியாது எங்களின்
சிறுவன்செய் கலையின் கூடம்:
ஆற்றலின் சிகரமாம் அன்பன்எம் சேயுடன்
அம்புலி! ஆட வாராய்!

அறங்களைச் செய்திடும் அரங்கன்எம்
சேயுடன்
அம்புலி! ஆட வராய்!

குளிர்கின்ற நிலவுநீ குவலய மாந்தரைக்
குளிர்வித்து மகிழ வைப்பாய்;
கொங்கு குரிசிலும் குறைவின்றி
நின்னைப்போல்
குளிர்தமிழைப் பேசுகின்றான்
வளர்தலும் தேய்தலும் வான்மதி
உனக்குண்டு
வையத்தில் எம்மன்னற்கு வளர்ச்சி
மட்டுமே யுண்டு, தளர்ச்சி அஃதில்லையே
வாக்கிதனை நீயும் கேளாய்!

மலர்ந்திடும் உன்கலைகள் மறைந்துவரும்
தன்மையால்
மனதில்நீ வருந்த வேண்டாம்
மன்னவன் அரங்கனின் பல்கலை நகரில்நீ
மதியும்நீ கலைகள் பெறலாம்
புலர்ந்திடும் பொழுதிலே கதிரென வீசுவான்
புரிந்துகொள் அவனின் ஆற்றல்
புறங்காட்டி ஓடாமல் பொன்மதீ! சேயுடன்
புகழோடு ஆட வராய்!

*(இப்பாடல் சாமம், பேதம், தானம், தண்டம் என்னும் நால்வகை உபாயங்களையும் பயன்படுத்தி எழுதப்பட்ட பாடல். கே.எஸ்.ஆர். என்னும் குழந்தையும், நிலவும் சமம் என்று கூறி அழைப்பது (சாம பேதத்தைக் கூறி) பேத உபாயம். வேண்டிய ஒன்றைத் தானமாகக் கொடுத்து நிலவை விளையாட அழைப்பது தான உபாயம் ஆகும். விளையாட வாராவிட்டால் தண்டனைக்க உள்ளாவாய் எனக்கூறி அழைப்பது தண்ட உபாயம் ஆகும். உபாயம் நான்கையும் இப்பாடலில் காணலாம்.)*

கவிஞர் ***திரு. மோ. ஆ. யுவராசா,***
தமிழ்ப்பேராசிரியர்,
கே.எஸ்.ஆர். கல்வியியல் கல்லூரி.

ல